**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.466/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜா | த–பெ | விஜயன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 64/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2025**

**எதிரிகள் ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். சார்பு ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2016 ம் ஆண்டு காரைக்குடி குற்ற பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து வந்தேன். கடந்த 14.04.2016 அன்று மதியம் 2.00 மணியளவில் ஓட்டுநர் லூயிராஜா, முதல் நிலை காவலர் ராஜேஷ் மற்றும் நான் உட்பட மூன்று நபர்களும் செக்காலை ரோடு பாண்டியன் தியேட்டர் அருகில் கட்டுப்பாட்டு வாகன பொறுப்பு அலுவலராக போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தோம். அப்போது அசா1 அங்கிருந்த தியேட்டரில் இருந்து வெளியே வந்த நபர்களை பார்த்து சாலையில் ஓரமாக செல்லுமாறு சொன்னார். அதற்கு ஆஜர் எதிரிகள் நீ என்ன பெரிய ஆளா என்றும் சுன்னி மகனே என்று கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டினார். அப்போது அசா1 ஓரமாக தான் செல்ல சொல்கிறேன் அதற்கு ஏன் திட்டுகிறீர்கள் என்ற சொன்னதற்கு அருகில் இருந்த கட்டை கம்பை கொண்டு அங்கிருந்த ஆஜர் எதிரிகள் அசா1 ஐ கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்கள்.

2) அசா1 ஐ பார்த்து நான் மற்றும் ராஜேஷ் காவலர் அவர்களும் உடனடியாக அங்கு சென்று அவர்களை ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று சொல்லி அங்கிருந்து கலைந்து செல்லும் படி சொன்னோம். அசா1 மேற்படி காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தார். நான் உடன் இருந்தேன். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

1) நான் பணியில் இருந்த போது பொதுவெளியில் பொதுமக்களுடன் பிரச்சனை செய்தது சம்பந்தமாக எத்தனை துறை ரீதியான வழக்குகள் உள்ளது என்றால் இல்லை தனி வழக்கு இருந்தது. நான் பணியில் இருந்த போது பொதுமக்களிடம் முரட்டு தனமாக

நடந்தது சம்பந்தமாக துறைரீதியான நடவடிக்கை என்மீது இருந்து அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) எதிரிகள் அனைவரும் மனநிலை சரியான நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது எதிரிகள் குடிபோதையில் இருந்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்வதற்கு முன்னால் குடிபோதையில் எதிரிகள் இருந்தார்களா என்று ஆய்வு செய்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 14.04.2016 அன்று தெறி என்ற படம் தியேட்டரில் ரிலீஸ் ஆகி இருந்தது என்றால் சரிதான். மேற்படி தெறி படத்திற்கு எதிரிகள் அனுமதி வாங்கி பாண்டியன் தியேட்டர் அருகில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் என்றால் வைத்திருந்தார்கள் ஆனால் அனுமதி வாங்கவில்லை. மேற்படி அனுமதி வாங்கினார்களா அல்லது வாங்கவில்லையா என்று எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. எதிரிகள் வைத்த ப்ளேக்ஸ் போர்டை காவல் துறையினர் உதவியுடன் கிழித்து அப்புறப்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

2) எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு வைப்பதற்கு அனுமதி பெற்று தான் பாண்டியன் தியேட்டர் உள்ளே வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அனுமதி பெற்றுதான் தியேட்டர் வாளகத்தில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் மற்ற நபர்கள் அனுமதி பெறாமல் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றும்போது எதிரிகள் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றினோம் அப்போது எதிரிகள் அதுகுறித்து பேசிய போது நான் என்னடா போலீசை எதிர்த்து பேசுகிறாயா என்று கேட்டதற்கு எதிரிகளை அடித்தார் அதற்கு எதிரிகள் சட்ட ரீதியாக உங்களை எதிர்கொள்வோம் என்று சொன்னதற்கு என்னை வைத்து பொய்யாக வழக்கு போட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) மேற்படி எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு சம்பந்தமாக பிரச்சனை முடிந்தபின்பு கேல்மெல் அணியாமல் வாகனம் ஓட்டி வந்த போது அவர்களை பிடித்து நானும் அசா1 ம் வழக்கு போடுவோம் என்று சொன்னதற்கு வழக்கு போடாமல் இருக்க வேண்டும் என்றால் கையூட்டு தரவேண்டும் என்று சொன்னதற்கு அவர்கள் கொடுக்க மறுத்துவிட்ட காரணத்தால் இந்த பொய்யான வழக்கை எதிரிகள் மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் படித்த நபர்கள் காவல்துறையினர் போக்குவரத்து சோதனையில் ஈடுபட்டிருந்தபோது எந்த வித முன் விரோதமும் இல்லாமல் காவல்துறையினரை திட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.12 17:26:19 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.466/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லூயி ராஜா | த–பெ | மைக்கேல் ராஜா |
| ஊர்: | : | திருப்பத்தூர் | | |
| வயது: | : | 37/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | முதல் நிலை காவலர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.11.2025**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1) நான் தற்சமயம் திருப்பத்தூரில் வசித்து இளையாங்குடி காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2016 ம் ஆண்டு காரைக்குடி அவசர வாகன போலீஸ் பிரிவில் ஓட்டுநராக பணி செய்து வந்தேன். கடந்த 14.04.2016 அன்று மதியம் 2.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் ராஜா, முதல் நிலை காவலர் ராஜேஷ் மற்றும் நான் உட்பட மூன்று நபர்களும் செக்காலை ரோடு பாண்டியன் தியேட்டர் அருகில் போக்குவரத்து சரி செய்யும் பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தோம். அப்போது பெயர் விலாசம் தெரியாத நபர்கள் ஓரமாக செல்லுமாறு நாங்கள் சொன்னதற்கு நீங்கள் என்னடா எங்களை சொல்வதற்கு என்று சுன்னி மகனே என்று கீழ்நோக்கிய வார்த்தைகளால் திட்டி அப்போது நான் ஓரமாக தான் செல்ல சொல்கிறேன் அதற்கு ஏன் திட்டுகிறீர்கள் என்ற சொன்னதற்கு அருகில் இருந்த கட்டை கம்பை கொண்டு அங்கிருந்த ஆஜர் எதிரிகள் உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்கள்.

2) என்னைப்பார்த்த என்னுடன் பணி செய்த சார்பு ஆய்வாளர் ராஜா மற்றும் ராஜேஷ் காவலர் அவர்களும் உடனடியாக அங்கு வந்தார்கள். அவர்களை அங்கிருந்து கலைந்து செல்லும் படி சொன்னார்கள். நான் மேற்படி காரைக்குடி வடக்கு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**. வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

குறுக்கு விசாரணை

1) எதிரிகள் அனைவரும் மனநிலை சரியான நபர்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த போது எதிரிகள் குடிபோதையில் இருந்ததாக புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளை கைது செய்வதற்கு முன்னால் குடிபோதையில் எதிரிகள் இருந்தார்களா என்று ஆய்வு செய்தது சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. 14.04.2016 அன்று தெறி என்ற படம் தியேட்டரில் ரிலீஸ் ஆகி இருந்தது என்றால்

சரிதான். மேற்படி தெறி படத்திற்கு எதிரிகள் அனுமதி வாங்கி பாண்டியன் தியேட்டர் அருகில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் என்றால் வைத்திருந்தார்கள் ஆனால் அனுமதி வாங்கவில்லை. மேற்படி அனுமதி வாங்கினார்களா அல்லது வாங்கவில்லையா என்று எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. எதிரிகள் வைத்த ப்ளேக்ஸ் போர்டை காவல் துறையினர் உதவியுடன் கிழித்து அப்புறப்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

2) எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு வைப்பதற்கு அனுமதி பெற்று தான் பாண்டியன் தியேட்டர் உள்ளே வைத்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் அனுமதி பெற்றுதான் தியேட்டர் வாளகத்தில் ப்ளேக்ஸ் போர்டு வைத்திருந்தார்கள் மற்ற நபர்கள் அனுமதி பெறாமல் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றும்போது எதிரிகள் வைத்திருந்த ப்ளேக்ஸ் போர்டை அகற்றினோம் அப்போது எதிரிகள் அதுகுறித்து பேசிய போது என்னுடன் வந்த சார்பு ஆய்வாளர் ராஜா என்னடா போலீசை எதிர்த்து பேசுகிறாயா என்று கேட்டதற்கு எதிரிகளை அடித்துள்ளார் அதற்கு எதிரிகள் சட்ட ரீதியாக உங்களை எதிர்கொள்வோம் என்று சொன்னதற்கு என்னை வைத்து பொய்யாக வழக்கு போட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடந்த 2016 ம் ஆண்டிற்கு முன்பு காரைக்குடியில் எத்தனை வருடமாக பணி செய்து வருகிறேன் என்றால் மூன்று ஆண்டுகள்.

3) சார்பு ஆய்வாளர் ராஜா அவர் மீது துறைரீதியான எத்தனை நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எத்தனை வருடமாக வாகன அவசர போக்குவரத்து பணி செய்தேன் என்றால் 2015–2016 வரை. மேற்படி எதிரிகள் ப்ளேக்ஸ் போர்டு சம்பந்தமாக பிரச்சனை முடிந்தபின்பு கேல்மெல் அணியாமல் வாகனம் ஓட்டி வந்த போது அவர்களை பிடித்து நானும் சார்பு ஆய்வாளர் ராஜாவும் வழக்கு போடுவோம் என்று சொன்னதற்கு வழக்கு போடாமல் இருக்க வேண்டும் என்றால் கையூட்டு தரவேண்டும் என்று சொன்னதற்கு அவர்கள் கொடுக்க மறுத்துவிட்ட காரணத்தால் இந்த பொய்யான வழக்கை எதிரிகள் மீது போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் படித்த நபர்கள் காவல்துறையினர் போக்குவரத்து சோதனையில் ஈடுபட்டிருந்தபோது எந்த வித முன் விரோதமும் இல்லாமல் காவல்துறையினரை திட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.11.12 17:26:26 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.